தலைவர் சேலை ஊராட்சி மன்றம் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை :திரு.J. கோவர்த்தனம்

ந.க.எண். 02/2024-25 **நாள்: 25.09.2024**

பொருள் : மனைபிரிவு திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் சேலை ஊராட்சி சேலை கிராம சர்வே எண்கள் 573/2, 573/3 (Old Survey No 223/17 . 223/18) பூரா ஏக்கர் 0.52 செண்ட் நிலத்தில் அடங்கிய **JSR GARDEN** குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி அளித்து உத்தரவிடல் சார்ந்து

பார்வை : நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மண்டலம் மாவட்டம் அவர்களின் கடித நகல் எண் **ந.க.எண்** 3232/2019/திவம2 DT 18.03.2020

உத்தரவு:

1. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அயத்தூர் ஊராட்சி அயத்தூர் கிராம சேலை கிராம சர்வே எண்கள் 573/2, 573/3 (Old Survey No 223/17 . 223/18) பூரா ஏக்கர் 0.52 செண்ட் நிலத்தில் அடங்கிய **JSR GARDEN** குடியிருப்பு மனைப்பிரிவு மனைகள் மனைப்பிரிவு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு மனைபிரிவு வரைபடம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களின் **ந.க.எண்** **ந.க.எண்** 3232/2019/திவம2 DT 18.03.2020 மூலம் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ம.வ./ந.ஊ.உ.இ(திவம) எண் 35/2020 ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவுக்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. 1994 ஊராட்சிகளின் சட்டம் மனைபிரிவு மற்றும் துணை விதிகளுக்கு உட்பட்டது.
2. மனைபிரிவுவரைப்படத்தில் உள்ளவாறு மனைகள் ஒதுக்கப்படவேண்டும். உள்கட்டமைப்பு மற்றும் வெளிகட்டமைப்பு ஏதும் மாற்றம் செய்யக்கூடாது.
3. மனைபிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைபிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் அமைப்பு இருக்க வேண்டும்
4. இவ்வாணையினை திருத்தம் செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ **ஊராட்சி மன்ற தலைவருக்கு** அதிகாரம் உண்டு.
5. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்டு வரைப்படத்தின்படி எல்லைக்கற்கள் வரையருக்கப்பட வேண்டும். மனைபிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைகற்களை கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

6. தேவையான பாலங்கள் சாக்கடை வடிகால், துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரவேண்டும்.
7. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கிகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.
8. மனைபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
9. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொருகட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.
10. தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைபிரிவு வரைப்படம் நகல் வழங்கப்பட வேண்டும்.
12. மனபிரிவு மனைகள் வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.
13. மனைபிரிவு இடம் 1984ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டபிரிவு 4(1)ன்படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.
14. மனைபிரிவு விதிமுறைகளின்படி கட்டணத்தொகை குறைவாக செலுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால் பிற்காலத்தில் அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
15. மேற்படி நகர்ஊரமைப்பு துறை இயக்குநர் அனுமதி கடிதத்தின்படி மனைப்பிரிவுக்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

J. Chamaly.

தலைவர்/செயல்அலுவலர்
சேலை ஊராட்சி
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்

தலைவர் / செயல் அலுவலர்
சேலை ஊராட்சி
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.J.ரவிக்குமார்
த/பெ ஜெயராமன்
எண் 117 ஈஸ்வரன் கோயல் தெரு
சேலை கிராமம் திருவள்ளூர் வட்டம்